[1974 சனவரி 22

திருக்குறளை தேசீய நூலாக்கல்

* **61 வினா.—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குறளை இந்தியாவின் தேசீய நூலாக ஆக்கிட மத்திய அரசை நம் மாநில அரசு கேட்டுக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தியாவினுடைய தேசீயப் பறவையாக, தேசீய மலராக ஒவ்வொன்றும் இருப்பதைப் போல் தேசீய நூலாக தமிழ்மறையாகிய திருக்குறளை இந்திய அரசு ஏற்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் எழுதப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தவொரு நாட்டிலேயும் தேசீய இலக்கியமாக ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக, மரபு இருப்பதாகத் தெரியவில்லை. தேசீய பறவை, தேசீய விலங்கு என்ற முறையில் வைத்திருக்கிறார்களே தவிர, எந்த ஒரு நாட்டிலும் நேஷனல் புக், நேஷனல் லிட்டரேச்சர் என்று குறிப்பிட்டு அதுதான் என்று கூறும் மரபு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி நாமும் வற்புறுத்திக் கேட்கலாம். அப்படியிருந்தால், இந்தியாவின் தேசீய இலக்கியம் என்ற முறை ஏற்பட்டால் அப்படி வைப்பதற்கு எல்லாவிதமான பொருத்தமும் உடைய நூல் திருக்குறள் என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். பொதுவாக உலகப் பொதுமறையாக இருப்பதாலும், எல்லா நாட்டு மக்களுக்கும் பொருந்துகின்ற தன்மையிருப்பதாலும் அதை உலக மக்களுக்குப் பொதுவான நூல் என்று சிறப்பித்துச் சொல்கிறோம். எனவே ஒரு இலக்கியத்தை தேசீய இலக்கியம் என்று ஏற்படுத்துகிறார்கள் என்ற நிலை வரும்பொழுது திருக்குறளைச் சொல்லலாம். அப்படி எந்த நாட்டிலேயாவது இருந்தால் அதைச் சுட்டிக்காட்டலாம். ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

1974 சனவரி 22]

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, திருக்குறள் இந்த நாட்டிலே எத்தனை மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது ? எல்லா பிரதானமான இந்திய மொழிகளிலேயும் மொழி பெயர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது கிட்டத்தட்ட உலக மொழிகளிலே 30 மொழிகளிலே; எல்லா மொழிகளையும் சேர்த்து 30-க்கும் மேற்பட்ட மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சமஸ்கிருத மொழியில், இந்தி மொழியில், மராட்டிய மொழியில், வங்காள மொழியில், தெலுங்கில், மலையாளத்தில், கன்னடம் ஆகிய இப்படிப்பட்ட முக்கியமான மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சீன மொழியிலேகூட திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு 1968-ம் ஆண்டிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே அந்த நூல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே,

“கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்”

என்று சிறப்பித்துக் கூறப்படும் கருத்தாழம் மிக்க அந்தக் குறளை எல்லா சர்வ கலாசாலைகளிலும் ஆராய்ச்சி செய்யும் நடைமுறையை அரசு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூன்று பல்கலைக் கழகங்களிலே திருக்குறள் ஆராய்ச்சிக்காக மூன்று மூன்று இலட்சம் ரூபாய் அறக் கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் சார்பாக ஆராய்ச்சி நடைபெறுகிறது. சென்னை பல்கலைக் கழகம் இதுவரையில் 5 நூல்களைக் கொண்டு வந்திருக்கிறது. மற்ற பல்கலைக் கழகங்களும் நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, திருக்குறளை தேசிய நூலாக அமைக்க இப்பொழுது சாத்தியமில்லை என்று கூறினார்கள். இருந்தாலும் குறைந்தபட்சம் அதைத் தேசிய நூல் என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையில் சில காரியங்களைச் செய்ய முடியும். உதாரணமாக, நம்முடைய சட்டமன்ற நூலகத்திலே

திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சி நூல் இருக்கிறதா என்று நேற்று முன்தினம் நான் தேடித் தேடிப் பார்த்தேன். ஒரு ஆராய்ச்சி நூல்கூட இல்லை. சட்டத் துறைக்கும், ஆட்சித் துறைக்கும் திருவள்ளுவர் கொடுத்த நல்ல கருத்துக்கள் நமக்குக் கிடைக்கும் வகையிலே நல்ல ஆராய்ச்சி நூல்களை வைத்து இதுதான் நமது தேசிய நூல் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணும் அளவிற்குச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்டமன்றங்கள் வைத்திருக்கின்ற நூலகங்களிலே நம்முடைய மாநில சட்டமன்ற நூலகம் மிகச் சிறப்பான ஒன்று என்பதை எல்லோரும் அறிவார்கள். வேறு பல மாநிலங்களிலுள்ள சட்ட மன்ற நூலகத் துறையை நான் பார்த்திருக்கிறேன். அவைகளில் இல்லாத அருமையான நூல்கள் இங்கே உண்டு. திருக்குறள் நூலும் உண்டு என்று கருதுகிறேன். அப்படி விடப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட நூல்களை வாங்கி வைப்பதற்கு அந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடை சொல்லும்பொழுது சென்னை பல்கலைக் கழகம் 5 நூல்களை வெளியிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் விவரம் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த நூல்களின் பெயர்களைச் சொல்ல வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும். 5 நூல்களை அந்த ஆராய்ச்சிக் குழுவினர் வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, இந்திய நாட்டில் தேசியப் பறவை என்றும், தேசிய விலங்கு என்றும் சிலவற்றைக் குறித்து வைத்திருக்கிறார்கள். வேறு சில நாடுகளில் தேசிய மலர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சில நாடுகளில் நூல் களைக் கூட குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். பொதுவாக இப்படிப்பட்ட அடிப்படை ஒன்று இருந்துதான் ஆக வேண்டுமென்ற கட்டாயமில்லை. தேசிய கீதம் வங்காள மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. தேசிய மொழியாக இந்தப் பிராந்தியத் திற்கு அப்பாற்பட்ட வேறொரு மொழி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழில் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தினரும் நாட்டினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்துக்களைத் தாங்கியுள்ள

1974 சனவரி 22]

திருக்குறளைத் தேசிய நூல் என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி ஒரு மரபைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தினால் வலிவு ஏற்பட முடியும். நாம் எழுதிய பிறகு அவர்கள் மறுத்துவிட்டால் அந்த அளவில் நின்றுவிடாமல் பாச்சர்யங்கள் ஏற்படவும், பல்வேறு போராட்டங்களில் இறங்கவும் வேண்டிய நிலை வரும். மத்திய அரசுக்கு எடுத்துக் கூறும்பொழுது அவர்கள் 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்திருக்கும் நாட்டில் என்று ஆரம்பித்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆகவே அப்படிப்பட்ட மரபு இருந்தால், அதைச் சுட்டிக் காட்டி கேட்க வழியிருக்கும். ஆனால் அப்படிப்பட்ட நிலைமையில்லை. அப்படி இல்லாததால் அந்தச் செயற்குறிப்பு இல்லை என்று குறிப்பிட்டேன்.

கால்டுவெல், போப் ஆகியோர் சிலைகள்.

* 62 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மெரினா கடற்கரை சாலையில் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோது அமைக்கப்பட்ட வெளிநாட்டு கிறிஸ்துவத் தமிழ் அறிஞர்களான கால்டுவெல், ஜி. யு. போப் ஆகியவர்களின் சிலைகள் தற்சமயம் அதற்கான இடங்களில் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணங்கள் யாவை ?

(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) சிலைகள் அதற்கான இடங்களில் இல்லை என்று தெரிய வருகிறது.

(ஆ) எற்கெனவே இருந்துவந்த சிலைகள் தற்காலிகமாக நிறுவப்பட்ட மாதிரி சிலைகள் என்றும், இப்போது இவை வெண்கலத்தில் நிரந்தரச் சிலைகளாக வடிக்கப்படுகின்றன என்றும்